

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11–1– 2025) கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் மாணவ, மாணவியர்களுடன் சமத்துவ பொங்கல் வைத்து கொண்டாடினார். இந்நிகழ்ச்சியில், திருமதி. துர்கா ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் .பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தலைமை நிர்வாக அதிகாரிகள் நரேந்திரன் மற்றும் திருமதி ஹெலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.1.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய மாநிலச் செயலாளராக பொறுப்பேற்றுக் கொண்ட பி. சண்முகம் அவர்கள் சந்தித்துப் பேசினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆர். எஸ். பாரதி, டி.கே.எஸ். இளங்கோவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் கே. பாலகிருஷ்ணன். மாநில செயற்குழு உறுப்பினர்கள் கே. கனகராஜ் டி. ரவீந்திரன் ஆகியோர் உள்ளனர்.

### 2026 சட்டசபை தேர்தலுக்காவது வருவாரா? 'சூனாபானா' கேரக்டர்தான் எடப்பாடி!

# மகளிர் பஸ் பயணத்தை'லிப்ஸ்டிக் அடித்து விட்டுள்ளார்கள்' என்று கொச்சைப்படுத்தி ஒட்டுமொத்த மகளிரையும் கேவலப்படுத்தி விட்டார் பழனிசாமி!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு கண்டனம்!

**சென்னை, ஜன.13-**

**2026 சட்டசபை தேர்தலுக்காவது பழனிசாமி வருவாரா? என்றும் சூனாபானா கேரக்டர்தான் எடப்பாடி என்றும், மகளிர் பஸ் பயணத்தை 'லிப்ஸ்டிக் அடித்து விட்டுள்ளார்கள்' என்று கொச்சைப்படுத்தி ஒட்டுமொத்த மகளிரையும் கேவலப்படுத்தி விட்டார் பழனிச்சாமி என்று பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு விடுத்துள்ள கண்டன அறிக்கை வருமாறு:-

சட்டப்பேரவையில் முதலமைச்சரின் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் பயந்து ஓடிய கோழை பழனிசாமி, வெளியே சென்று வழக்கம் போலவே தன் உளறல்களை பேட்டியாக கொட்டியிருக்கிறார். சட்டப்பேரவையில் முதலமைச்சரும் அமைச்சர்களும் சான்றுகளுடன் தோலுரித்த விரக்தியில் செய்தியாளர்களிடம் வண்டி வண்டியாக பொய்களை கொட்டியிருக்கிறார் பச்சைப் பொய் பழனிசாமி.

ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலை புறக்கணிப்பதாக அறிவித்திருக்கிறார் பழனிசாமி. இப்படிதான் விக்கிரவாண்டி இடைத் தேர்தலையும் புறக்கணித்தார். இது தேர்தல் புறக்கணிப்பு அல்ல. பழனிசாமி தலைமை மீதான ஆளுமை அசிங்கப்பட்டு விடக் கூடாது என்பதற்காக செய்யப்பட்ட ஏற்பாடு இது.

**10 தேர்தல்களில் தோற்றவர்தான் புரட்சித் தமிழர்!**

2017 ஆர்.கே.நகர் இடைத் தேர்தல், 2019 நாடாளுமன்ற தேர்தல், 2019ல் நடந்த 22 சட்டசபை தொகுதிகளின் இடைத் தேர்தல், 2019ல் நடைபெற்ற ஊரக உள்ளாட்சி தேர்தல், 2021 சட்டமன்ற தேர்தல், 2021ல் நடந்த 9 மாவட்ட ஊரக உள்ளாட்சி தேர்தல், 2022ல் நடந்த நகர்புற உள்ளாட்சி தேர்தல், ஈரோடு கிழக்கு இடைத் தேர்தல், 2024 நாடாளுமன்றத் தேர்தல், விளவங்கோடு இடைத் தேர்தல் என தொடர்ந்து 10 தேர்தல்களில் தோற்றவர்தான் புரட்சித் தமிழர்!

ஈரோடு கிழக்கு தேர்தலிலும் தோற்று, '11 தோல்வி பழனிசாமி' என்ற அவப் பெயரை துடைக்க தேர்தலில் போட்டியிடாமல் கோழை போல பழனிசாமி களத்தைவிட்டே ஓடியிருக்கிறார். தன்னுடைய எஜமான் பாஜகவின் ஓட்டு வங்கிக்கு சேதாரம் வந்துவிடக் கூடாது என்பதற்காக பாதம்தாங்கி பழனிசாமி தேர்தல் புறக்கணிப்பு என்ற கூத்தை அரங்கேற்றியிருக்கிறார். தான் அசிங்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அதிமுகவையே பலீபீடமாக்கியிருக்கிறார். 2026 சட்டசபை தேர்தலுக்காவது வருவாரா? அல்லது ஓடி ஒளிவாரா?

**வீண் பழியை சுமத்தும் பழனிச்சாமி!**

'சட்டசபையில் நான் 2 மணி நேரம் பேசிய வீடியோவை கேட்டால் தரவில்லை' என சொல்லியிருக்கிறார் பழனிசாமி. உங்கள் ஆட்சியின் லட்சணம் என்ன? என தெரிந்து கொண்டாவது பழனிசாமி பேட்டி கொடுத்திருக்கலாம். அ.தி.மு.க. ஆட்சியில், 'சட்டசபை நிகழ்ச்சிகளை நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டும்' என ஜெகதீசன் என்பவர் தொடர்ந்த பொது நல வழக்கில், 'நிதி நெருக்கடி காரணமாக நேரடி ஒளிபரப்புக்கு வாய்ப்பில்லை' என்று நீதிமன்றத்தில் கையை விரித்தவர்கள்தான், இன்று நேரடி ஒளிபரப்பை செய்யும் எங்களைப் பார்த்து வியாக்கியானம் பேசுகிறார்கள்.

அ.தி.மு.க.வின் பத்தாண்டு ஆட்சியில் சட்டசபை நடவடிக்கைகளை அரசின் திரைப்படப் பிரிவின் சார்பில் வீடியோ எடுத்து எடிட் செய்து அவர்கள்தான் டி.வி.க்களுக்கு வழங்கினார்கள். அதில் ஆளும் கட்சியின் நடவடிக்கைகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டன. எதிர்க் கட்சியினர் புறக்கணிக்கப்பட்டார்கள் என்பது நினைவில் இல்லையா?



மாணவர்களின் மருத்துவ கனவை சீரழிக்கும் நீட் தேர்வை தனது ஆட்சிக் காலத்தில் பா.ஜ.க.வுடன் சேர்ந்து கொண்டு வந்து துரோகம் செய்தவர் பழனிசாமி. அதை மறைக்க திராவிட மாடல் அரசின் மீது வீண்பழியை சுமத்துகிறார். நீட் தேர்வை ரத்து செய்ய ஏ.கே.ராஜன் கமிட்டி நியமனம், அந்த குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் சட்டமன்றத்தில் நீட் ரத்து மசோதா என நீட் தேர்வை ரத்து செய்ய என்னவெல்லாம் செய்ய முடியுமோ அத்தனை வழிகளிலும் திராவிட மாடல் அரசு முயற்சிகளை செய்து வருகிறது என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள். நீட் தேர்விற்கு எதிராக தி.மு.க. அரசியல் ரீதியாகவும் சட்டரீதியாகவும் போராடியது. அப்படி நடத்திய போராட்டங்களை அ.தி.மு.க.வால் பட்டியல் காட்ட முடியும்?

"நீட் தேர்வு விலக்கு மசோதா கிடப்பில் போடப்பட்டு, வழக்கு நீதிமன்றத்துக்கு வந்து ஓராண்டுக்கு வெளியிலேயே தெரியாமல் அ.தி.மு.க. ஆட்சியில்தான் இருந்தது. சட்டப்பேரவையில் கூட நீங்கள் தெரிவிக்கவில்லை" என முதலமைச்சர் கேள்வியெழுப்பி பழனிசாமியின் துரோகத்தை தோலுரித்தார். அதற்கு பதில் சொல்ல கோழை பழனிசாமிக்கு துணிவு இருந்ததா?

**'சூனாபானா' கேரக்டர் பழனிச்சாமி!**

நீட் தேர்வை ரத்து செய்ய மாட்டோம் என பிடிவாதமாக நடைமுறைப்படுத்தி வரும் பா.ஜ.க.வோடு அ.தி.மு.க. கள்ளக்கூட்டாளி வைத்திருக்கிறது. அந்த ஆட்சியை அகற்ற வேண்டும் என 'இந்தியா'கூட்டணியை வலுப்படுத்தியவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின். ராகுல் காந்தியும் நீட் தேர்வை ரத்து செய்வோம் என வாக்குறுதி அளித்தார். துரதிஸ்டவசமாக மீண்டும் பாஜக ஆட்சிக் கட்டிலேறிவிட்டது. நீட் தேர்வை ரத்து செய்யாமல் ஆதிக்கம் செய்யும் தனது கள்ளக்கூட்டாளி பா.ஜ.க.வைப் பற்றி விமர்சிக்க கோழை பழனிசாமிக்கு மனம் வரவில்லையே ஏன்? எடப்பாடி பழனிசாமி உறவினர் என்.ராமலிங்கத்திற்கு சொந்தமான இடங்களில் தொடர்ந்து 5வது நாளாக வருமானவரித் துறை சோதனை நடைபெற்றது. அடுத்து நம்ம வீட்டுக்கு வந்துவிடுவார்களோ என்ற பயம் பழனிசாமிக்கு இருக்குமல்லவா? "கோபால் என்னை போல தைரியமான ஆளா... பயந்தவன் தானே. விரட்டி விரட்டி வெட்டினது எல்லாம் ஞாபகத்துக்கு வந்து போகும் இல்லையா" என வடிவேலுவின் சூனாபானா கேரக்டர்தான் பழனிசாமி.

மகளிர் உரிமைத்தொகையையும், மகளிர் விடியல் பயணத்தையும் இழிவுப்படுத்தி பேசியிருக்கிறார் பழனிச்சாமி. அவருடைய ஆட்சியில் காயலான் கடை கணக்காக ஓடிக்கொண்டிருந்த பேருந்துகளை அகற்றி விட்டு, புதிய பேருந்துகள் வாங்கி தமிழ்நாடு முழுக்க விட்டிருக்கிறது திராவிட மாடல அரசு. அதிலும் மகளிர் இலவச பயணம் செய்யக்கூடிய பேருந்துகளை முற்றிலும் புதுமையானதாகவும் சிறப்பானதாகவும் வடிவமைத்து விட்டிருக்கிறோம். இதெல்லாம் பேருந்தில் செல்பவர்களுக்கு தெரியும். எடப்பாடி பழனிச்சாமிக்கு எப்படி தெரியும். விடியல் பயணம் திட்ட பஸ்ஸுக்கு லிப்ஸ்டிக் அடித்து விட்டுள்ளார்கள் என்று கொச்சைப்படுத்தி ஒட்டுமொத்த மகளிரையும் கேவலப்படுத்தியிருக்கிறார்.

அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் 5 இலட்சம் கோடிக்கும் மேலாக கடன் வாங்கியபோதும் அதனால் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கோ தமிழ்நாட்டு மக்கள் பயன் பெறும் சிறப்பு திட்டம் எதையும் செயல் படுத்தாமல் ஊழல் ஆட்சி நடத்திய ஊதாரி பழனிசாமி தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை வரலாற்றில் இல்லாத வகையில் உயர்த்தி தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்தையும் அரசின் திட்டங்களின் மூலம் பயனடைய செய்திருக்கும் திராவிட மாடல் அரசைப் பற்றி குறை சொல்வதற்கு எந்த அருகதையும் கிடையாது.

**தமிழ்நாட்டின் எதிர்காலத்துக்காக சிந்திப்பவர் எங்கள் முதல்வர்!**

கடன் வாங்கி மகளிர் உரிமைத் தொகை, புதுமைப்பெண், தமிழ் புதல்வன், விடியல் பயணம் போன்ற மக்கள் நலத்திட்டங்களை மேற்கொள்கிறார்கள் இந்த கடனை எப்போது அடைப்பார்கள் என்று என்னவோ ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதையாக எடப்பாடி ஆதங்கப்பட்டிருக்கிறார். அந்த கடனை அடைக்கும் திறனும் திறமையும் முதல்வருக்கு உண்டு. எடப்பாடி அவர்களே... எங்கள் முதலமைச்சர் இன்றைக்காகவோ நாளைக்காகவோ சிந்திப்பவர் அல்ல. தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்காக சிந்திக்கும் அக்கறையுள்ள ஒரு தலைவர்.

**அண்ணாநகர் சிறுமி வழக்கில் அ.தி.மு.க. பிரமுகர்!**

அண்ணா பல்கலைக்கழக விவாகரத்தில் ஆதாரம் இருந்தால் கொடுங்கள் என சட்டமன்றத்தில் முதலமைச்சர் அ.தி.மு.க. வினரிடம் கேட்டு அவர்களின் கபட நாடகத்தை அம்பலப்படுத்தினார். முதலமைச்சரின் கேள்விக்கு பதில் சொல்லாமல் ஓடி வந்து விட்டு பத்திரிக்கையாளர்களிடம் வீராவேசமாக பழனிசாமி பேசியிருப்பதை பார்த்து மக்கள் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள். அண்ணா நகர் சிறுமி வழக்கில் அ.தி.மு.க.வை சேர்ந்தவருக்கு இருந்த தொடர்பு சந்திக்கு வந்துள்ளதை மறைக்க பழனிசாமி நடத்திய கபட நாடகம்தான் யார் அந்த சார்? எனும் வதந்தி அரசியல் என்பது மக்களுக்கு தெளிவாகி விட்டது.

தந்தை பெரியாரையே சீமான் கடுமையாக அசிங்கப்படுத்தியிருக்கிறார். அவரை வன்மையாக கண்டிக்காமல் வலிக்காத மாதிரி வார்த்தைகளை விட்டிருக்கிறார் பழனிசாமி. இது அ.தி.மு.க. இயக்கத்துக்கே அவமானம். தமிழ்நாட்டுக்கு மிகப்பெரிய அநீதியான யு.ஜி.சி. அறிவிப்பு, நிதி பகிர்வில் பாரபட்சம் போன்ற முக்கிய பிரச்சனைகளை திசை திருப்பதான் பா.ஜ.க.வின் அடியாளான சீமான் இப்படி பேசி இருக்கிறார் என்று புரிந்தத தால் தான் பாம்புக்கும் வலிக்காமல் தடிக்கும் வலிக்காமல் பார்த்துக்கொண்டு கண்டிக்கிறார் பழனிசாமி. இதற்கு பதிலாக அண்ணா தி.மு.க. என்னும் பெயரையே அமித்ஷா தி.மு.க. என்றோ ஆர்.எஸ்.எஸ். தி.மு.க. என்றோ மாற்றிக் கொள்ளலாம்.

பொள்ளாச்சி விவகாரத்தில் சட்டமன்றத்தில் பதில் சொல்ல முடியாதவர் சட்டமன்றத்தில் வாங்கி கட்டிக் கொள்வோம் என்ற அச்சத்தில் வெளியே போய் பொய்களை விதைத்திருக்கிறார்.

எந்த தகுதியுமே இல்லாமல் குறுக்கு வழியில் முதலமைச்சரான எடப்பாடி பழனிச்சாமி அந்த முதலமைச்சர் பதவிக்கு சிறுமைதான் சேர்த்தார். தன்மானத்துக்கும் சுய கௌரவத்துக்கும் பெயர் பெற்ற தமிழ்நாட்டுக்கே இழுக்காகவும் அவமான சின்னமாகவும் ஒன்றிய அரசுக்கு கும்பிடு போட்டு அடிமையாகி தமிழ்நாட்டு மாண்பையே குலைத்தவர் பழனிசாமி.

இவ்வாறு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

---

### வனவிலங்குகளால் பாதிக்கப்படும் குடும்பங்களை -

# விவசாயிகளைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை! பாதுகாப்பான நிதி உதவி!

## சட்டப்பேரவையில் கவன ஈர்ப்பு தீர்மானத்தில் அமைச்சர் முனைவர் க.பொன்முடி பதில்!

**சென்னை, ஜன.13-**

**வனவிலங்குகளால் பாதிக்கப்படும் குடும்பங்களை - விவசாயிகளை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பாதிக்கப்படுவோருக்கு பாதுகாப்பான நிதி உதவியும் வழங்கப்பட்டு வருகிறது என்றும் வன விலங்குகளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு பதிலளித்து பேசுகையில் முனைவர் க.பொன்முடி குறிப்பிட்டார்.**

இதுகுறித்து கவன ஈர்ப்பில் அமைச்சர் க.பொன்முடி ஆற்றிய பதிலுரை வருமாறு :-

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் வன விலங்குகளின் உயிர்களைப் பாதுகாப்பதிலும், அதே நேரத்தில் வன விலங்குகளால் மனிதர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாமல் தடுக்க வேண்டும் என்ற நிலையிலும், விவசாயிகளுக்கு எந்த சேதமும் வரக்கூடாது என்ற நிலையிலும், பல்வேறு நடவடிக்கைகளை கடந்த காலங்களில் எடுத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

குறிப்பாக, இப்போது பேசியவர்களெல்லாம் எடுத்துச் சொன்னது காட்டுப் பன்றிகளால் ஏற்படும் இன்னல் குறித்து. திருநெல்வேலியிலும் பொறுப்பு அமைச்சராக இருக்கிற அன்புக்குரிய நேரு அவர்களும், திண்டுக்கல் மாவட்டத்தினுடைய அமைச்சராக இருக்கிற நம்முடைய இ.பெரியசாமி அவர்களும், அதுபோல, விவசாயிகளின் நலன்கள் பாதிக்கப்படுகின்றன என்று விவசாயிகளுடைய குறைகளையெல்லாம் நம்முடைய வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர், எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களெல்லாம் எடுத்துச் சொன்னதன் அடிப்படையில் தான், இங்கு, இன்று காட்டுப் பன்றிகள், குறிப்பாக, இந்த நிகழ்வுக்காக, காட்டுப் பன்றிகளை எப்படி அடக்குவது என்பது குறித்து முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் அடிப்படையில் 2023-லேயே, அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் அவர்களுடைய ஆலோசனையின்படி ஒரு குழு நியமிக்கப்பட்டது. குறிப்பாக, அந்தக் குழுவில் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் தலைமையில் விவசாயப் பிரதிநிதிகள் வனத் துறை, வருவாய்த் துறை, வேளாண் துறை, தோட்டக்கலைத் துறை, அறிவியல் நிபுணர்கள், தன்னார்வலர்கள் மற்றும் வன உயிரின ஆர்வலர்கள் என மொத்தம் 19 நபர்கள் அடங்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டது.

அவர்கள் ஒரு பரிந்துரையைக் கொடுத்தார்கள். அந்தப் பரிந்துரையெல்லாம் பார்த்து தான் நாங்கள் இந்த G.O.-வையும்--முதலமைச்சர் அவர்கள் வனத் துறையின் சார்பாக இந்த அரசாணையை வெளியிட வேண்டுமென்று அவரே ஆணையிட்டு, நேற்று இந்த அரசாணையையும் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த அரசாணையின் படி, இதுவரையில், காட்டுப் பன்றி என்பதை இங்கே நண்பர்களெல்லாம் சுட்டிக்காட்டியதைப் போல, ஒன்றிய அரசுதான், எது, எது வன விலங்குகள் என்று அறிவிக்கிறது. அந்த வன விலங்குகள் அறிவிப்புப் பட்டியலில் இந்தக் காட்டுப் பன்றிகளும் இருக்கின்றன. அதை விலக்குவது என்பது அவ்வளவு சாதாரணமாக முடியாது. ஆனால், அதே நேரத்தில் வன விலங்குகளால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுகின்றன என்று இங்கேயிருக்கிற விவசாயிகளெல்லாம் முதலமைச்சர் அவர்களிடம் வைத்த கோரிக்கைகளின் அடிப்படையிலும், அமைச்சர் பெருமக்கள், இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லோருமே அதை எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக, இங்கே பேசிய நம்முடைய உறுப்பினர் மணி அவர்களாக இருந்தாலும், உறுப்பினர் செங்கோட்டையன் அவர்களாக இருந்தாலும், உறுப்பினர் ஜெகன் மூர்த்தி அவர்களாக இருந்தாலும், உறுப்பினர் ரூபி. ஆர். மனோகரன், உறுப்பினர் டாக்டர் A.R.R. ரகுராமன், உறுப்பினர் தி. வேல்முருகன் மற்றும் உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார் ஆகிய அனைவருமே. மொத்தம் 25 பேர்கள் இந்தக் கவன ஈர்ப்பு அறிவிப்பினை கொடுத்திருக்கிறார்கள். அதில் பேசியவர்களெல்லாம், குறிப்பாக, வன விலங்குகளினால் ஏற்படும் தொந்தரவுகளை எடுத்துச் சொல்லி, பாதுகாப்பு வழங்க வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அதனடிப்படையில்தான், முன்னாள் வனத் துறை அமைச்சர் இருக்கிற போதே, முதலமைச்சர் அவர்களுடைய ஆணையின்படி ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது. அந்த அடிப்படையில்தான், இந்த G.O. இப்போது வெளியிடப்பட்டிருக்கிறது.



அந்தச் சட்ட விதியின்படி, காப்புக் காட்டிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவு வரையுள்ள பகுதியில் காட்டுப் பன்றிகளை சுட அனுமதியில்லை. ஏனென்றால், ஒன்றிய அரசின் சட்டத்தின்கீழ், காட்டுப் பன்றிகள் இருக்கின்றன. அவை காட்டுப் பக்கத்திலேதான் இருக்கும். அந்த ஒரு கிலோ மீட்டர் வரைக்கும் அவை வந்து, சென்று கொண்டிருக்கலாம். அதை ஒரு கிலோ மீட்டர் வரையில் சுட அனுமதியில்லை.

**விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளிக்கும்!**

அதே நேரத்தில் காப்புக்காட்டிலிருந்து 1 கி.மீ. தொலைவிலிருந்து, 3 கி.மீ. தொலைவு வரை உள்ள பகுதியில் காட்டுப் பன்றிகளைப் பிடித்து மீள திருப்பியனுப்ப வேண்டும். அதற்காக வனத் துறை அதிகாரிகள் அந்தப் பகுதிகளில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும், அதிகமாக நியமிக்கப்படு வார்கள். அதன் அடிப்படையில்தான் இதுவும் தெரிவிக்கப்படுகிறது. 1 கி.மீ. முதல் 3 கி.மீ. வரை அவை பிடிக்கப்பட்டு திருப்பியனுப்பப்படுகின்றன. குழு பரிந்துரைந்தது 5கி.மீ.தூரம். ஆனால், முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, விவசாயிகள் அதிக அளவில் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அதையும் குறைத்து, 3 கி.மீ. ஆக, வனப்பகுதியிலிருந்து 3 கி.மீ.-க்கு அப்பால் வருமானால், அதை சுடுவதற்கும் அரசாணையின்படி அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது விவசாயிகளுக்கெல்லாம் பெரு மகிழ்ச்சியை அளிக்கும் என்பதில் எந்த வேறுபட்ட கருத்தும் இல்லை. 3 கி.மீ.-க்கு அப்பால் வந்தால் பன்றிகளை சுடலாம்.

வனத் துறை அதிகாரிகளுக்கு அவற்றை சுடுவதற்கு அனுமதி உள்ளது.

மேலும் யானைகள் குறித்து உறுப்பினர்கள் தெரிவித்திருக்கிறீர்கள். யானைகளைப் பற்றி கூறும்போது இந்த அவையில் பல்வேறு உறுப்பினர்களும், யானைகளும் உள்ளே புகுந்து பல்வேறு உயிர் சேதம் கூட ஏற்படுத்துகிறது என்றெல்லாம் சுட்டிக்காட்டினார்கள். இந்த அவையில் பேசிய உறுப்பினர் அன்புச்சகோதரர் செந்தில்குமார் அவர்களும் சொன்னார்கள். அதையே ஐ. பெரியசாமி அவர்கள் பேசும் போது திண்டுக்கல் மாவட்டத்தில் இருக்கிறபோது, இதுபோன்ற பகுதிகளில் இது போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று கன்னிவாடி-சாகத்தில் கோம்பை ஆத்தூர் பகுதிகளில் 2-1-2025 முதல் ஒரு யானைக் கூட்டம் மக்களுக்கு இடையூறாக செயல்படுவதாக, 2-ம் தேதியன்று காலையில் என்னை தொலைபேசி மூலம் என்னை தொடர்புகொண்டு சொன்னார்.

நானும், அதனை துறைச்செயலாளர் அவர்களிடம் தெரிவித்து, உடனடியாக அதன்மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, 2 கும்கி யானைகள் அனுப்பப்பட்டன. உள்ளே நுழைந்த யானைகள் அனைத்தும் விரட்டியடி க்கப்பட்டதையும் நீங்கள் பத்திரிகை செய்திகளிலும் தொலைக்காட்சியிலும் பார்த்திருப்பீர்கள். ஆகவே, முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, வனத்துறை அதிகாரிகள் இதற்கான உரிய நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

**மயில்களால் சேதம்!**

மேலும், மயில்களைப் பற்றியும் சொன்னீர்கள். மயில் என்பது தேசியப் பறவை என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். அந்த தேசியப் பறவையான மயில் கூட இந்த வன விலங்குப் பட்டியலில் முதல் இடம் பெற்றிருக்கிற பறவையாக இருக்கிறது. ஒரு காலத்தில, இந்த மயிலை வீட்டில் சிலர் வளர்த்திருக்கிறார்கள். ஆனால் தற்போது அந்த மயிலினால் ஏற்படுகிற சேதத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக, அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. அதைப் பொறுத்தவரையில், நான் குறிப்பாக சொல்லிக்கொள்ள விரும்புவது, இந்த அரசினால் மட்டும் தமிழ்நாடு உயிர்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டம் போன்ற திட்டங்களின் மூலமாக, ரூ.2.394 கோடி செலவில் 46.5 கி.மீ. தொலைவிற்கு யானை புகாமல் இருப்பதற்காக, நாம் அகழி வெட்டுதல், மணி அவர்கள்கூட அகழி வெட்ட வேண்டும் வேலி வைக்க வேண்டும் போன்ற கருத்தையெல்லாம் இங்கே தெரிவித்தார்கள்.

அதையும் நாங்கள் செய்து கொடுத்திருக்கிறோம். அதே போன்று, சூரிய மின்வேலி அமைப்பது குறித்தும் கேட்டார்கள். சூரிய மின்வேலி அமைப்பதற்கான ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்திருக்கிறது. இவ்வாறெல்லாம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, முதலமைச்சர் அவர்கள், இந்த நான்கு ஆண்டுகளில் யானைகளினாலோ, மயில்களினாலோ, காட்டுப் பன்றிகளினாலோ எந்தப் பிரச்சினைகள் ஏற்பட்டாலும்,

அதேபோன்று, இந்த ஆட்சியில்தான் மனித-விலங்கு மோதல்களால் பாதிக்கப்படுவோருக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகை இரண்டு முறை உயர்த்தப்பட்டு, தற்பொழுது ஒவ்வொரு மனித உயிரிழப்பிற்கும் ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் தான், இந்த நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என்று கூறியதின் பேரில், இந்த நிவாரணத் தொகை இரண்டு முறை உயர்த்தப்பட்டு, யானைகள், புலிகள் உள்ளிட்ட வன விலங்குகளால் உயிரிழப்புகள் ஏற்படுமேயானால், உயிரிழப்பவரின் குடும்பத்திற்கு ரூ.10 இலட்சம் வழங்கப்படுகிறது. தலைவர் அவர்கள் தான், அந்த நிவாரணத் தொகையை இரண்டு முறை உயர்த்தியிருக்கிறார்கள்; தற்போது அந்த நிவாரணத் தொகை என்பது ரூ.10 இலட்சமாக வழங்கப்பட்டு வருகிறது.

நிவாரணத் தொகை வழங்கப்படும். அப்படி ஏதேனும் உயிரிழப்புகள் ஏற்பட்டிருந்தால் எழுதிக் கொடுங்கள். வனவிலங்குகளால் உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்குமேயானால், முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிவாரணத் தொகையாக ரூ.10 இலட்சம் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படும். அதே போன்று, எந்தப் பகுதியிலும் யானைகளினாலோ, வனவிலங்குகளினாலோ உயிரிழப்பு ஏற்படுமேயானால் அதை எங்களிடம் சொல்லலாம். விவசாயி களுக்கு பாதிப்புகள் ஏற்பட்டாலும் அதை எங்களிடம் சொல்லலாம்.

2022-2023 ஆம் நிதியாண்டில் 6,765 நபர்களுக்கு 11.43 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. 2023-2024 ஆம் நிதியாண்டில் 10,260 நபர்களுக்கு 17.30 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. 2024-2025 ஆம் நிதியாண்டில் 2-1-2025 வரை 5,035 நபர்களுக்கு 10.55 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நிதியாண்டிற்கு கூடுதலாக ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, வனவிலங்குகளால் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கு, விவசாயிகளுக்கு பாதுகாப்பாக நிதியுதவி வழங்குவதற்கும் தமிழக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இனிமேல், இதுபோன்ற உயிரிழப்புகள் ஏற்படுமேயானால், அந்தப் பகுதியிலேயிருக்கிற நீங்கள் அதை எங்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்தால், நிச்சயமாக நாங்கள் உரிய நடவடிக்கைகளை எடுப்போம்.

நான் ஒன்றேயொன்றை சொல்ல விரும்புகிறேன்; வனத் துறைக்கான பெரும்பாலான விதிகளெல்லாம் ஒன்றிய அரசிடம் தான் இருக்கிறது; நம்மிடம் சிறிதுதான் இருக்கிறது; நிதிகூட அவர்கள் கொடுப்பதுதான். அது போன்ற நிலைமை இருக்கின்ற காரணத்தினால், நம்முடைய கட்டுப்பாட்டிற்குள் என்னென்ன செய்ய முடியுமோ அதை செய்வதற்கு, முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றதையடுத்து, அவர் இதற்கான உரிய ஆணைகளையெல்லாம் வழங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார். அந்த அடிப்படையில் வனத் துறை தொடர்ந்து செயல்படும் என்று தெரிவித்து அமைகிறேன்.

இவ்வாறு வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி பதிலளித்தார்.



தந்தை பெரியார் குறித்து அவதூறு பரப்பும் விதத்தில் அருவருக்கத்தக்க வகையில் பேசிய நாம் தமிழர் கட்சி சீமான் மீது சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரி புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில் அதன் அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் புதுச்சேரி காவல் முதுநிலை கண்காணிப்பாளர் கலைவாணனை நேரில் சந்தித்து மனு அளித்தனர்.